400

உ

முருகன் துணை.

# சுப்ரமண்யர்மாலை.



இ. ராமசாமிக்கோன்,
புக்ஷாப்,
...க்காவ[illegible]ளிமூலவீதி, மதுரை.

——

[அணா 1.

...யர் பிரஸ், மதுரை.

1925,

CQ26:417
N25
178837

உ

# சுப்ரமண்யர் மாலை.

திண்டுக்கல் திராவிடாபிமானி
ம. அழகர்சாமிபிள்ளை



அவர்கள்பார்வையிட்டது

எக்ஸெல்ஸியர் பிரஸ்
மதுரை

—

1925.

40

உ

சிவமயம்.

# சுப்ரமண்யர் மாலை.

## காப்பு.

சீர்பெருகுந்தென்பழனி யாண்டவர்க்கோர்
 சுப்ரமண்ய மாலையாக
ஏர்பெருக எழில்பெருக எந்நாளும்
 பாக்கியத்தே யிதம்பெருகப்
பார்பெருகும்பழனிமலைக் கதிபதிமேற்
 பைந்தமிழால் பாடல்செப்ப
ஆர்பெருகுமானைமுகத் தைங்கரனே
 அனுதினமு மருள்செய்வாயே.

## துதி.

சரவணபவனே ஆறிருபுயனே
 சயரொளி பவனெனவருவாய்
அரனிடபுதல்வா மரகதவடிவேல்
 ஐங்கரற்கிளைய வேல்முருகா
மரகதவடிவேல் கரத்தினிலெடுத்து
 மயிலினிலேறியே வருவாய்

அரகரமுருகா அறுமுகாசரணம்
ஐயனே சுப்ரமண்ணியனே. (க)

## நோக்கந்தீர.

சிரத்தினில்முடியுந் திருமுகத்தழகுஞ்
சிறுவிழிமாணிக்கத் தொளியுஞ்
சிரசினில்சடையும் மிருகுளைமூக்குஞ்
செங்கனிவாய்ப் பசும்பொன்னர்
மரகதமிழைத்த கழுத்திருபுயமும்
மதிவட்டம்போல் வயரிடையும்
இருதுடைப்பசும்பொன் பாதமேசரணம்
ஈஸ்வரா சுப்ரமண்ணியனே. (உ)

## வசனிப்பு.

கூத்தனையுதைத்த அரனிடபுதல்வா
குமரனே பழனியில்வாழும்
நாற்றிசையுனது மலையிடவொளியும்
நயமுறு தோப்புடனழகும்
நேர்த்தியும்பணிதி கோபுரத்தழகும்
நிசமதில் தூவியினழகும்
பார்த்திடத்தினமும் பரிமளவாசம்
பழனியில் சுப்ரமண்ணியனே. (ந)

## தோத்திரம்.

அநுதினமுனையே நம்பினே னுன்னை
அருள்புரிந் தாதரியப்பா
பணிமதியாரு மாலையா யணிவாய்
பாடவுமாலையா யணிவாய்
துணிகரமாகத் தமிழுரைகூறத்
துணையென உதிக்கும்வடிவேல்
மணியசைந்தாட ம்மயிலினிலேறி
வந்திடுஞ் சுப்ரமண்ணியனே. (௪)

## வள்ளியைச் சேர்ந்தவிடம்.

குறமகளான வள்ளியைச்சேர்ந்த
குமரனே அறுமுகக்கந்தா
குருவென நீயும் அநுதினம்வரமுங்
கொடுத்திடும் பவுசுபாக்கியங்கள்
கரத்தினில்வடிவே லெடுத்திடுந்துரையே
கடாட்சமும் வைத்தெனக்கருள்வாய்
அரகராமுருகா சரவணபவனே
அருள்தருஞ் சுப்ரமண்ணியனே. (௫)

## பாக்கியந் தந்தவிடம்.

மவுனமாய் நீயு மிருந்திடவேண்டாம்
மன துவைத்தெனக் கருள்செய்வாய்
பவுசும்பாக்கியமும் அதிகமாய்க்கொடுக்கப்
பசுமயிலேறியே வருவாய்
சவுரியந் துணிவு அறிவுநல்வசியம்
சகலமுங்கேட்டது தருவாய்
தவசுகந்தென்னை அனுதினமனதில்
தயவுவை சுப்ரமண்ணியனே. (சு)

## சொற்பனத் தொழுவு.

நித்தியமெனது சொற்பனந்தனிலும்
நேரிடும்பாவங்கள் நீக்கிச்
சத்தியமாக நித்தியம் நினைக்கச்
சரவணபவனென வருவாய்
புத்தியும்பவுசும் புத்ரபாக்கியமும்
புண்ணியவிபூதி நீதருவாய்
குற்றமேகோடிச் செய்திடப்பொறுப்பாய்
குமரனே சுப்ரமண்ணியனே. (எ)

### பேய் விலக்கல்

அநுதினமெனையே அதட்டியேபேய்வந்
தணுகிடும் வேளையில்கந்தா
நணுகியேகுரல்விட் டழுதுநான்பழனி
நாயகாசண்முகா வென்பேன்
துணிகரத்துடனே வேல்முனைக்கிரையாய்
துணித்திடற் குரமுடன்வருவாய்
புனிதமுள்ளவனே ஆறிருபுயனே
புண்ணியா சுப்ரமண்ணியனே. (அ)

### பசி சோம்பல்.

மிகுந்திடும்பசியில் மயக்கமுஞ்சோபம்
மெலிந்துநா னிருக்கையில்குமரா
தகதிமியெனவே தாசிகளாடத்
தவில்முரசதிரவேவந்து
நிகழதா மாப்பால் பழமொடுதீபம்
நிதந்தாத் தாசிகளாட
அகமகிழ்ந்தெனக்குச் சுகிர்தமுங்கொடுவா
அப்பனே சுப்ரமண்ணியனே. (கூ)

### தூதரை விலக்கல்.

கிட்டியேதூதர் கட்டியேகயிறுல்
கொலைசெய்ய உயிர்பிடித்திழுத்தால்

கட்டில்லாத் துயரம் பட்டழுதுன்னை
மனத்தினில் நினைத்திடத் தந்தாய்
கெட்டியானது சடாட்சரஞ் செபித்துக்
கெலித்திடவேல் விட்டுத் துரத்திக்
கட்டியே நீறு நெற்றியிலிடுவாய்
கர்த்தனே சுப்ரமண்ணியனே. (௰)

சத்ருசங்காரவேல் தனையெடுத்துச்
சுவாமிவந்தெதிரினில் நின்று
சத்துவங்கெடவே பேய்முனிராட்சதை
சடைவிரித்தாடியே புலம்ப
புத்திடத்திரையைச் செந்தணல்மூடிப்
பொருமுனைவேலினா லிடித்துப்
புத்தியைக்கொடுத்துப் பேய்தனைவிலக்கு
புண்ணியா சுப்ரமண்ணியனே. (௧௧)

## பில்லிசூனியம் விலக்கல்.

சல்லிய நூல்கள் அறிந்திடும்போர்கள்
சதிருடன் கருவெடுத்தென்பேர்
சொல்லியே நினது கருவதைத்தடவிச்
சூட்டியேயுருகச் செய்வேளை

பில்லிசூனியமும் பெரும்பகையாவும்
பேர்சொல்ல ஓடச்செய்வாய்
வலமையுள்ள மயிலினிலேறி
வந்திடு சுப்ரமண்ணியனே. (கஉ)

ஆற்றினிலிறங்கி அக்கரைசேர்முன்
அதிக நீர்பெருகி வந்தால்
போற்றியேமனதில் நினைந்திட முருகா
புண்ணியா நிமிஷத்தில்வந்து
சேர்த்தியேவாரி யெடுத்திருகையால்
க்ஷணத்தினி லக்கரைவிடுவாய்
பூத்திடுமுருகா புண்ணியமுருகா
புரந்தரா சுப்ரமண்ணியனே. (கரு)

ஆனையை விலக்கல்.

மதம்பொழிந்தானை வந்தெனைவளைத்து
மதத்தினால் வதைத்திட வருமுன்
இதம்பெறஉனையே நினைத்திடமனதில்
இருமயிலேறியே வருவாய்
நிதம்பெறயானை வணங்கிடவசியம்
நீறிடும்நெற்றியில் தினமும்
வதனமுள்ளவனே ஆறிருபுயனே
வசிகரா சுப்ரமண்ணியனே. (கசு)

## வரந்தந்தவிடம்.

மரகதவடிவாய் ஒயிலிசைநடையாய்
மயிலினிலேறியே வருவாய்
துரகதமானரதத்தினிலேறித்
துருசினிலே வரந்தருவாய்
சரவணபவனே சகலமுந்தருவாய்
சடுதியிலனுதினம் வருவாய்
அரகரமுருகா அமரர்கள் துணைவா
அய்யனே சுப்ரமண்ணியனே. (கரு)

## வேங்கையை விலக்கல்.

வினைப்புலிவேங்கை சினந்துகையோங்கி
வாய்திறந்தெனதுமேல் எதிர்த்தால்
நினைந்துன்னை மனதில் நினைந்திட முருகா
குமரனே அரகரா வருவாய்
சரிந்திடக்குடல்கள் சரிந்திடவேங்கை
சண்முகாவேலினு லிடித்துப்
பரிந்தெனைத்தினமும் பார்த்திருகண்ணால்
பழனியில் சுப்ரமண்ணியனே. (கசு)

## கள்ளரை விலககல்.

ஆர்ப்பரித்தெழுந்து தடத்தினில்கள்ள
ரடுத்தென்னைப் பறித்திட நினைத்தால்

அறுமுகத்தோடே ஆர்ப்பரித்தெழுந்து
அசுரரைவதைத்த வேல்முருகா
தீர்க்கமாய்திருடர் திசைகள்கெட்டலேயத்
திக்குவேருகவே துரத்திக்
காப்பதுன்செயலே அடியனே த்தினமும்
கர்த்தனே சுப்ரமண்ணியனே. (கஎ)

## தற்கருபமானவிடம்

அற்புதமாக எப்போதுவருவாய்
அசுரரைவதைத்த வேல்முருகா
கற்பூரச்சுடரே மெய்ப்பொருள்தருவாய்
கர்த்தனே மயிலினில்வருவாய்
சொற்பனத்தருள்வாய் துதிமிகு துணையாய்
சோதியே சுடரொளிவிளக்கே
தற்பரா என்னே நித்தமுங்காப்பாய்
தயாபரா சுப்ரமண்ணியனே (கஅ)

## கார்மழைவிலக்கல்.

காட்டினில்தனியே செல்கின்றநேரம்
காத்துடன்மழைகள் வந்தெதிர்த்தால்
மூட்டியேநெருங்கிப் பொழிந்திடமழைகள்
முருகையாவென் றுனே நினைக்க

ஓட்டியேோதத்தை முடுகினில்வந்து
உதவிசெய்மழை விழா திருக்கக்
கூட்டியே துணைவா அரனருள்புதல்வா
குமரனே சுப்ரமண்ணியனே. (கசு)

பகைவரை விலக்கல்.

வழிதப்பித்தனியே வருகின்றநேரம்
வங்குலேப்பகைவர் வந்தெதிர்த்தால்
குளறியேமனதில் இருதயங்கலங்கிக்
குமரனே யென் றுனையழைக்கப்
பழிபடப்பகைவர் சிதறிட நீயும்
பருமயிலேறி வருவாய்
வெளிபடப்பகைவர் மிரண்டிடவாளால்
வெட்டு நீ சுப்ரமண்ணியனே. (உ0)

பீடை விலக்கல்.

வேங்கையின்வடிவாய் விபூதியின்வெளியாய்
வெண்மலர் பூவினிற்சுடராய்
தாங்கியேமலையை யெடுத்திடும்இடும்பன்
தயாபரனுகிய துணையாய்
நீங்கியேபீடை நிமிசத்தில்விலக்கி
நீடுறுநெற்றியில் தினமும்
காங்கயன்கழுகு மலையினில்வாழும்
கந்தனே சுப்ரமண்ணியனே. (உக)

## சர்ப்பம் விலக்கல்.

சீறியேசர்ப்பம் சீறியேயென்னை
மனத்தினால் கடித்திடனினைத்தால்
பாரியமயிலில் பாம்பதுமென்னைப்
பாதகம் நினைந்திடக் கந்தா
சீறியேகடித்தால் விஷமதையிறக்கி
யிரண்டுகையா லென்னையெடுத்துத்
தேறிடமனத்தைத் தைரியப்படுத்து,
தேசிகா சுப்ரமண்ணியனே. (உஉ.)

## ஜடாமுனியைவிலக்கல்.

காளியங்கூளி ஜடாமுனிராட்சதைக்
காட்டிலே யெதிர்த்தெனைமிரட்டக்
காளியங்கூளி கலங்கிடமனது
கதறிநான் மாலையைப்பாட
தாழிகைதூரம் மயிலினிலேறி
நாயகா திடத்துடன்வருவாய்
வாழிசைகுகனே வழித்துணையாக
வந்திடுஞ் சுப்ரமண்ணியனே. (உ௩)

## பூசைபுரிந்த இடம்.

நிச்சயமாக நினைந்துனைப்பூசை
நிரஞ்சனம் செய்திடுமவற்கு

பட்சிகளறிந்து கருவதையெடுத்துப்
பாதகஞ்செய்திட நினைத்தால்
மிச்சம்விடாமல் அவர்களைச்சிதர
வேலினுய்பிளந்தெறி கந்தா
நிட்சணரூபா ரட்சகாவாவா
நிதிதரும் சுப்ரமண்ணியனே. (உச)

சுவாமி வந்தவிடம்.

மெய்யெனவுனையே நம்பினபேர்க்கு
மெய்யென வரந்தாருமையா
பொய்யெனவுனையே யிகழ்ச்சிசெய்தோற்கே
பெரும்பிணி அதிகமாய்க்கொடுப்பாய்
ஐய்யனேமெய்யா உனைவிடஎனக்கு
ஆதரவெங்கையுங் காணேன்
மெய்யனேமெய்யா ஐயனேவாவா
சிவசிவ சுப்ரமண்ணியனே. (உரு)

காச்சல் விலக்கல்.

அடித்திடுங்காய்ச்சல் உபத்திரத்துடனே
அடிமையாய்வந்தவர் சொன்னால்
படித்துநானுனது மாலையைத்தினமும்
பாலன்நான் விருத்தியுங்கொடுக்கக்
கடித்திடத்துடைத்த வகையதுபோலக்
கர்த்தனே பறந்திடக்கண்பார்

படித்திடத்தினமும் வலப்புறம்வருவாய்
பழனியில் சுப்ரமண்ணியனே. (உசு)

## பிழை பொறுப்பது.

அறிந்தறியாமல் செய்திடும்பிழையை
ஆண்டவா பொறுப்பதுன்செயலே
தெரிந்துநின்மனதில்குற்றமாய்வைத்துத்
தெண்டனை செய்திடவேண்டும்
பரிந்துநீயுனது மைந்தனென்றெண்ணிப்
பவுசுபாக்கியங்களைக் கொடுப்பாய்
கரியமால்மருகா அரனிடபுதல்வா
காங்கையா சுப்ரமண்ணியனே. (உஎ)

## தற்சொருபமானவிடம்.

வாருமென்றுனையேமனத்தினில் நினைந்தால்
வந்துநில் அடியேன்முன்கந்தா
தாருமென்றுனையே கேட்டநல்வரமும்
தாட்சியில்லாமலே கொடுப்பாய்
காருமென்றுனையேமனத்தினில் நினைந்தால்
கர்த்தனே யனுதினங்காப்பாய்
பாருமென்றுனையே அனுதினம் நினைத்தேன்
பராபரா சுப்ரமண்ணியனே. (உஅ)

சாலையுமாலையு மனுதினமுனையே
  கந்தாவென்றுன்னை யானினைக்க
வாலையம்வயதாய் வாழிடம்வருவாய்
  வள்ளிதெய்வானை தன்கணவா
காலையுமாலையு மனுதினம்வந்து
  காட்சியுமோட்சமுங் கொடுப்பாய்
சோலையங்கிளிபோல் வாய்திறந்தோர்சொல்
  சொல்லையா சுப்ரமண்ணியனே. (உகூ)

அர்ச்சனை புரிந்தவிடம்.

அனுதினமுனையே மனத்தினில் நினைந்து
  அர்ச்சனை செய்துநானிருக்க
இனியென்னையுனது அறுமுகதெரிசனை
  யீந்திடா திருப்பதேனையா
புனிதமாயுனது அடியேன்செய்பிழையைப்
  பொறுத்தென்முன் வருவாய்கந்தா
பணிதலுள்ளோர்க்குத் தெரிசனைகாட்டும்
  பரமனே சுப்ரமண்ணியனே. (௩0)

பாக்கியந்தந்தவிடம்.

காவிவஸ்திரமும் கழுத்திலுத்ராட்சம்
  கைதனில் சிவமணியெடுத்துத்

தேவியேயுனது சடாட்சரஞ்செபித்து
வெற்றிவேல் கைதனிலெடுத்துக்
கூவியமயிலி லேறியேவந்து
கொடுத்தருளதிக பாக்கியமும்
நீதியாயெனைவந் தாளுவாயையா
நித்தனே சுப்ரமண்ணியனே. (௬௧

மந்திரவுபதேசப் பொருள்.

திரமுடன்கிரியுங் கிரியுடைத்தாகத்
திரள்புய அச்சரத்தெளிவாய்
சரவணபவனே சயரொளிபவனே
சடாட்சரக் கோர்வையாமுதலாய்
உரமுடன்வருவாய் திரிபுரபவனே
உயரொளிபவ குருநாதா
அரகரபவனே பகரொளியானே
ஐயனே சுப்ரமண்ணியனே. (௬௨

சுப்ரமண்யர் மாலை
முற்றிற்று.